நெல்லுடைக்கும்' மா அரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் பொலித்தீன், கேக், குளிர்பான தயாரிப்புக்களுக்கு
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கைக்கடிகாரம்! அழகுசாதன, அன்பளிப்பு, எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்களுக்கு
நாடுங்கள்:
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீ. தி யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 09 வியாழக்கிழமை (23 – 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 116

# 50 வருடங்களாக அரசு ஏமாற்றி வந்தது
# இனியும் எம்மை ஏமாற்ற முடியாது!

## மட்டக்களப்பில் கரிகாலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

கடந்த ஐம்பது வருடங்களாக தமிழர்கள் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுக்களை நடத்தி ஏமாந்து விட்டனர். இனிமேலும் அப்படி ஏமாற முடியாது; ஏமாறமாட்டோம்.

— தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மட்டக்களப்பில் வைத்து இவ்வாறு கூறினார்.

திரு. கரிகாலன் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுக்களின் போது நான்கு கோரிக்கைகளை அரசுக்கு முன் வைத்தோம். ஆனால் அக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவில்லை.

போர் தவிர்ப்பு தொடர்பான 600 மீற்றர் கட்டுப்பாட்டு பிரதேச ஏற்பாடு யாழ். குடாநாட்டுக்குள் பொருந்தும். கிழக்கிற்கு அது பொருத்தமில்லை. அங்கு நிலைமை வேறாக உள்ளது.

கிழக்கில் பதுங்கியிருந்து தாக்கும் நிலையில் இராணுவம் உள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

வாவியிலும், கடலிலும் சுதந்திரமாக மீன் பிடிக்க

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரபாகரனை நாடு கடத்தும்படி சந்திரிகாவிடம் இந்தியா கேட்கும்?

### கொழும்புப் பத்திரிகைகள் தகவல்

கொழும்பு, மார்ச் 23

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்தும் சாத்தியம் தொடர்பாக இந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கும் ஜனாதிபதிசந்திரிகா குமாரணதுங்காவுடன் இந்தியா பேச்சு நடத்தும் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன. முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவதற்கு இலங்கை தயாராக உள்ளதா என்பது குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின் போது சந்திரிக்காவிடம் கேட்கப்படுமென சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவிற்கான தனது 4 நாள் விஜயத்தை இவ்வாரம் ஆரம்பிக்க இருக்கிறார், என்பது தெரிந்ததே [ஓ-4]

## பிரபா விவகாரம் குறித்து சந்திரிகா புதுடில்லியில் பேச்சு நடத்தமாட்டார்

### ஜனாதிபதி செயலகம் நேற்று மறுப்பு அறிக்கை

கொழும்பு, மார்ச். 23

"பிரபாகரனை நாடு கடத்தும் விவகாரம் பற்றி ஜனாதிபதி சந்திரிகாவுடன் புதுடில்லியில்இந்தியா பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது என்று நேற்று கொழும்புப் புதினப்பத்திரிகைகளில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானதும் ஆதாரமற்றதும் ஆகும் இந்த செய்தி அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு குழிபறிக்கும் நோக்கத்துடன் புனையப்பட்ட கெடு நோக்குடைய செயலாகும். அத்துடன் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அவநம்பிக்கையை ஏற்படுத்த இச்செய்தி மூலம் முயற்சிக்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

பங்களாதேஷுக்கும் இந்தியாவுக்குமான ஜனாதிபதியின் இவ் விஜயம் கடந்த ஆண்டிலேயே மேற்கொள்ளப் படவிருந்த நல்லெண்ண விஜயமாகும்.

நாடுகளுக்கு இடையே இருதரப்பு உறவுகளை மேலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா விவகாரம் குறித்து பேசப்படும்

### இந்திய வெளியுறவு அமைச்சர் தகவல்

மணிலா, மார்ச் 23

புதுடில்லி வரும் இலங்கை ஜனாதிபதியிடம் —

திரு. பிரபாகரனை இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்படைக்க இயலுமா என்பது குறிந்து முதன் முதலாக — நேரடியாக — பேச விருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

'வெரித்தாஸ்' வானொலி இத்தகவலை வெளியிட்டது.

வெளியுறவு அமைச்சர் பிரணப் முகர்ஜி இதே தகவலை வெளியிட்டதாக "ஏஸியா வோச்" என்ற பத்திரிகையும் தெரிவித்துள்ளது.

திரு. பிரபாகரன் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இல்லை என்பதாலும்—

புலிகளுடன் இலங்கை அரசு சமாதானப் பேச்சுக்களை நடத்திவருவதாலும்—

இவ்வேளையில் திரு. பிரபாகரனை நாடுகடத்துவது பற்றிய கோரிக்கையை இந்தியா முன்வைத்தால் அது சந்திரிகாவுக்கு பெரும் சங்கடங்களை உருவாக்கக்கூடும் என்று கணிக்கப்படுவதாக "வெரித்தாஸ்" குறிப்பிட்டது.

## பிரபாகரன் பற்றி பேசப்படமாட்டாது

### இலங்கை வெளியுறவு அமைச்சர் மறுப்பு

கொழும்பு, மார்ச் 23

பிரபாகரனை நாடு கடத்துவது என்ற விவகாரம் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவின் புதுடில்லி விஜயத்தின் போது பேசப்படமாட்டாது. அவ்வாறு பேசப்படும் என வெளியான செய்திகளை திட்டவட்டமாக மறுக்கிறேன்.

— இவ்வாறு இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று ரூபவாஹினிக்குத் தெரிவித்தார்.

கடந்த டிசம்பரில் புதுடில்லியில் இந்தியப் பிரதமருடன் விரிவாகப் பேச்சு நடத்தினேன்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் அது மகிழ்ச்சிக்குரியது. அதனால் இந்தியாவுக்கும் ஒரு பிரச்சினை தீர்ந்துவிடும் என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா வார இறுதியில் மேற்கொள்ளும் புதுடில்லி விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரலில், பிரபாகரனை நாடு கடத்தும் விடயம் குறித்து பேச்சு நடத்துவதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எத்தகைய கோரிக்கையையும் எம்மிடம் விடுக்கப்படவில்லை. ஆகவே அத்தகைய விடயம் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு ஏதுமில்லை. — இவ்வாறு அமைச்சர் கதிகாமர் தெரிவித்துள்ளார். (உ-4-6)

## சூட்கேஸுக்குள் குண்டு!

கொழும்பு, மார்ச். 23

கட்டுநாயக்கா விமான நிலைய வீதியிலுள்ள ரயில் பாதை கதவுக்கு அருகில் சூட்கேஸுக்குள் குண்டு ஒன்று அநாதரவான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

விமானப் படையின் குண்டுகளைச் செயலிழக்க வைக்கும் பிரிவினரால் இந்தக் குண்டு நேற்று முன் தினம் வெடிக்க வைக்கப்பட்டது. (ஓ-6)

முச்சந்தி முரளி



இப்பவே சூடு உப்பிடி எண்டா, அடுத்த மாசத்திலை நிலைமை எப்படியோ ... ?

## ஆசிரியருக்கான புதிய சம்பளம் உடனடியாக அமுலுக்கு வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 23

நீண்ட காலமாக ஆசிரியர்கள் எதிர்பார்த்திருந்த ஆசிரிய சேவையும் புதிய சம்பளத் திட்டமும் தொடர்பான சுற்றறிக்கையை கல்வி உயர்கல்வி அமைச்சுச் செயலாளர் எம். டீ. டீ. பீரிஸ் வெளியிட்டுள்ளார். இந்தச் சுற்றறிக்கை உடனடியாக நடைமுறைப் படுத்துவதற்காக சகல மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர்களுக்கும், மாகாணக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

1995 மார்ச் 8 ஆம் திகதியிடப்பட்ட 95/07 ஆம் இலக்கமுடைய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

மேற்படி சுற்றறிக்கையை கல்வி அமைச்சின் செயலாளர் தகவலுக்காக ஆசிரிய சங்கங்களின் தலைமை அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்

**சம்பள அட்டவணை 6 ஆம் பக்கத்தில்**

06-10-1994 ஆம் திகதியில் சேவையிலுள்ள சகல நிரந்தர ஆசிரியர்களும் இப்புதிய சுற்றறிக்கைக்கு உள்வாங்கப்பட்டு 01-01-1995 ஆம் திகதியிலிருந்து புதிய சம்பளத் திட்ட அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பணித்துள்ள போதும், ஆசிரியர்களுக்குரிய சம்பள மாற்றக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டு சம்பளப் பட்டியலில் புதிய சம்பளத்தை வழங்க குறைந்தது மேலும் இரண்டு மாதகாலம் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக மகாசிவம் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள ஆசிரியர்களை புதிய ஆசிரியசேவையில் உள்வாங்கும் போது ஆசிரியர்கள் தற்போது பெறும் வருடாந்த சம்பளம், பெறப் போகும் புதிய சம்பளம் தொடர்பான விவரத்தை ஆறாம் பக்கத்தில் பார்க்கவும்.

### பூநகரி முகாமை அகற்றுவது தவிர்ந்த

# புலிகளின் 3 கோரிக்கைகளையும் ஏற்பதற்கு அரசாங்கம் தயாராம்!

கொழும்பு, மார்ச் 23

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய அரசின் முடிவை மீளாய்வு செய்து சாதகமான பதிலைத் தருவதற்கு அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் காலக்கெடு விதித்திருப்பதை அடுத்து —

அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான புலிகளின் நான்கு கோரிக்கைகளில், — பூநகரி முகாமை அகற்றுதல் என்ற கோரிக்கை தவிர்ந்த — ஏனைய மூன்று கோரிக்கைகள் சம்பந்தமாகவும் சாதகமான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை மேற்கோள் காட்டி "லங்காதீப" பத்திரிகை தகவல் வெளியிட்டது.

பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல், மீன்பிடித் தடையை முற்றாக விலக்குதல், கிழக்கில் புலிகள் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதித்தல் ஆகியவையே மற்றைய மூன்று கோரிக்கைகளாகும்

இதற்கிடையில் —

வடக்கு - கிழக்கு மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தணிக்கும் முகமாக, எரிபொருள் தடையையும், மீன் பிடிப்பதற்கான கடல்வலயத் தடையையும் மேலும் தளர்த்துவது குறித்து அரசாங்க உயர்மட்டத்தில் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழப் பகுதிகளுக்கு மேல் சூரியன் உச்சிக்கு வருகிறது

### சூழல் வெப்பம் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

தமிழீழப்பகுதிகளுக்கு மேல் சூரியன் உச்ச நிலைக்கு வருவதால் சூழல் வெப்ப நிலை வழமையை விட அதிகமாக இருக்கின்றது.

அடுத்தமாதம் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சூரியன் தமிழீழப் பகுதிக்கு நேர் மேலே வரும் என வானிலை அவதான நிலையங்கள் தெரிவிக்கின்றன. இதன்படி அத்திகதிகளில் சூரியன் கீழே குறிப்பிடப்படும் இடங்களுக்கு நேர்மேலே வரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

9 ஆம் திகதி — கல்முனை
10 ஆம் திகதி — ஏறாவூர்
11 ஆம் திகதி — பட்டிப்பளை
12 ஆம் திகதி — திருமலை
13 ஆம் திகதி — மன்னார்
14 ஆம் திகதி — முல்லைத்தீவு
15 ஆம் திகதி — பலாலி

(உ-4)

## நரோமா பயணிகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 23

எதிர்வரும் 30 ஆம் திகதி நரோமா கப்பலில் பயணம் செய்வதற்கு யாழ். செயலகத்தில் பணம் செலுத்திய பயணிகள் அன்றையதினம் பிரயாணத்தை மேற்கொள்ளுவதற்கான அனுமதி கூட்டுப்படை தலைமையகத்திடம் இருந்து கிடைத்துள்ளது.

அன்றைய தினம் பயணம் செய்யவிரும்பியோரை அன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

# தூதுக்குழுவை அனுப்ப அரசுத் தரப்பு முயற்சி?

கொழும்பு, மார்ச் 23

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து முடிவு செய்வதற்கு அரசுக்கு தலைவர் வே பிரபாகரன் காலக்கெடு விதித்திருப்பதை அடுத்து —

அது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தூதுக்குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கு அரசுத் தரப்பு முயன்று வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடைசியாக யாழ்ப்பாணம் வந்து திரும்பிய — இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திச் சென்ற — அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, "மோர்ஜ்" அமைப்புத் தலைவர் சார்ள்ஸ் அபேசேகரா ஆகியோர் அடங்கிய குழுவையே அவசர அவசரமாக திரும்பவும் யாழ்ப்பாணம் அனுப்பி பேச்சு நடத்த அரசு முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பியதும் —

அவ்வேளை டென்மார்க், லண்டன் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்ட பின்னர் கொழும்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தூதுக்குழு அனுப்பும் திட்டத்தை உறுதிப்படுத்துகிறார் கதிர்காமர்

அரசின் இரண்டாவது தூதுக்குழு ஒன்றை வடக்கே அனுப்புவது குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பிரஸ்தாபித்திருக்கிறார்.

தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்துள்ள காலக்கெடு அரசை பெரிதும் பாதிக்காது என்றும் —

இது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் நோக்குடன் இரண்டாவது பிரதிநிதிகள் குழு ஒன்று விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் போது இன்னும் இரண்டொரு நாட்களில் — நிலைமை மாறக்கூடும் என்றும் —

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது (உ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரிசுப் புதையல்

உங்களுக்காக

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடத்தும்

உற்பத்தி எழுச்சி வாரம் தொடர்பான

# பொது அறிவுப் போட்டி

**போட்டியின் நிபந்தனைகள்:**

1. தமிழீழத்தின் மக்கள் அனைவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். (வயது எல்லை இல்லை)
2. கீழே தரப்பட்டுள்ள 25 வினாக்களுக்கும் ஒரு முழுத்தாளில் விடைகளை தெளிவாக எழுதி 10 - 04 - 1995ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு முதன்மைச் செயலகம், மாவட்ட / கோட்ட / வட்ட அலுவலகங்களிலோ அல்லது அவ்வப்பகுதி உற்பத்திக் குழுக்களில் கடித மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.
3. விடைகளை தபாலில் அனுப்புவதாயின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், முதன்மைச் செயலகம், தாவடி என முகவரியிட்டு அஞ்சல் உறையில் இட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. அனுப்புபவரின் முழுப்பெயர், வதிவிட முகவரி, வயது, மாணவராயின் கல்வி பயிலும் பாடசாலை போன்ற விவரங்களை தெளிவாக வேறொரு தாளில் எழுதி விடைத்தாளுடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. முடிவு திகதியின் பின்னர் விடைத்தாள்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. இப்போட்டியில் குறித்த புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான இரண்டாம் சுற்றுப் போட்டி வினாடி - வினாப் போட்டியாக நடத்தப்படும். இதற்கான விவரங்கள் நேரில் அனுப்பி வைக்கப்படும்.
7. குறித்த புள்ளிகளுக்கு மேல் தெரிவு செய்யப்படும் அனைவருக்கும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். இரண்டாம் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு தங்கப் பதக்கம் உட்பட பெறுமதியான பல பரிசில்கள் மாவட்ட ரீதியாக வழங்கப்படும்.

கிராமிய

உற்பத்திக்குழு பகுதி

த. பொ. மே. நிறுவனம்,

அரசியல்துறை,

தமிழீழ விடுதலைப் புலிகள்,

தமிழீழம்.

## உற்பத்தி எழுச்சி வாரம் வினா - விடைப் போட்டி

01. தமிழீழத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பின் பெயர் என்ன?
02. கிராமங்களில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டு செயற்பட்டு வரும் அமைப்பின் பெயர் என்ன? அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும், துறையையும் தருக.
03. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட கம்புத் தானியத்தின் தாவரவியற் பெயர் என்ன?
04. சூழல் பாதுகாப்புப் பகுதியால் பெரியளவில் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் சவுக்கங்காடு யாழ். குடா நாட்டில் எங்கு அமைந்துள்ளது?
05. தமிழீழத்தில் வெளிவரும் ''காப்பரண்'' என்னும் சஞ்சிகை எந்த வளத்தின் மேம்பாட்டை வெளிப்படுத்துகின்றன?
06. மீளக் காடாக்கம் தமிழீழத்தில் நகரம்வரை கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றிற்குரிய மிகப் பொருத்தமான சான்று ஒன்று தருக.
07. தமிழீழத்தில் துறைசார்ந்த வெளியீடுகள் பல உண்டு. பொருண்மிய மேம்பாட்டை வெளிக் கொண்டுவரும் சஞ்சிகையின் பெயர் என்ன?
08. தமிழீழத்தின் கரையோரப் பகுதி எவ்வளவு தூரத்தில் நீண்டு கிடக்கின்றது?
09. காய்கறி, இலைக்கறி வகைகளில் ஆகக் கூடிய புரதச் சத்தைக் கொண்டுள்ளது எது?
10. தென் தமிழீழத்தில் அதிகளவில் காணப்படுகின்ற கொழுப்புச் சத்து அதிகளவில் கொண்டுள்ள பயன் தரும் மரம் எது?
11. உலகில் வாழை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் இடம் எது?
12. சேனைப் பயிர்ச்செய்கையின் மூலம் ஏற்படுகின்ற தீய விளைவுகளில் ஒன்று தருக?
13. 45 ஆண்டுகளில் 10 இலட்சம் ரூபா பெறும் சேமிப்புத் திட்டமும், 2000 ஆண்டளவில் 2 கோடி பனை ஆக்கும் திட்டமும் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
14. வட தமிழீழத்தின், தென் தமிழீழத்தின் நெற் செய்கை பரப்பளவு யாது?
15. தமிழீழத்தில் தன்னிறைவு மேலோங்க ஏற்றுமதி வாய்ப்புள்ள மூன்று உற்பத்திகள் எவை?
16. தமிழீழ மக்களின் அபிவிருத்திக்கென இதுவரை கோடிக்கணக்கான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் கிராம மட்ட நலன் பேணும் நிதியத்தின் பெயர் என்ன?
17. தமிழீழ அபிவிருத்திக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்க வேண்டிய அத்தியாவசிய தேவைகள் எவை?
18. வட தமிழீழத்திலுள்ள நெற் செய்கை நிரப்பரப்பில் எத்தனை கெக்டயர் நிலத்தை உற்பத்திக்குக் கொண்டு வருவதன் மூலம் வட தமிழீழ நெற் தேவையை தன்னிறைவுக்குக் கொண்டு வரலாம்?
19. கிடைக்கும் ஒவ்வொரு துளி நீரையும் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் தேவையான நீர் வளங்களை இனம் காணவும், புதிய நீர் நிலைகளை உருவாக்கவும் ஏற்கனவே இருப்பவற்றை புனரமைக்கவும் த பொ. மே. நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் என்ன?
20. வட தமிழீழத்தில் தற்பொழுது சகல தனியார் கைத்தொழில் நிறுவனங்களையும் பதிவு செய்தும், தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான உள்ளீடுகள் அல்லது கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்து இயங்காத நிறுவனங்களையும், கைவிடப்பட்டிருக்கும் நிறுவனங்களையும் இயங்க வைக்கும் முயற்சியில் செயற்படும் நிறுவனம் எது?
21. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நோக்கம் என்ன?
22. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எந்தெந்த நடவடிக்கைகளுக்கு மானியம் வழங்கி உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கமளித்துள்ளது? ஊக்கமளித்து வருகின்றது.
23. வருடா வருடம் நடைபெறும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் எவ்வாரத்தில், எம்மாதத்தில் நடைபெறுகின்றது?
24. புற்பாய் உற்பத்தியில் உள் நாட்டில் பயன்படுத்தப்படும் புல் வகையின் பெயர் என்ன?
25. ஆக்கி ... சாயன சேர்க்கை எதுவாகும்?

[சி-829]

---

சங்கானை – மாவடி

ஞானவைரவ தேவஸ்தானம்

வருடாந்த அலங்கார உற்சவகால

## தெய்வீகப் பேருரை

பொருள்: **பெரிய புராணம்**

[தொடர்விரிவுரை]

நிகழ்த்துபவர்: 'சிவசுரபி' ஆறு. திருமுருகன் B.A.
(ஆசிரியர் ஸ்கந்தவரோதய கல்லூரி)

காலம்: 23-03-95 வியாழன் முதல் 01-04-95 சனிக்கிழமை வரை

நேரம்: இரவு 8மணிமுதல் 9மணிவரை

மேலும் காலை 8மணிக்கு அபிஷேகமும் மாலை 6மணிக்கு வசந்தமண்டப பூஜையும் நிகழும்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

-பரிபாலன சபையினர்.

22-03-95 [35844]

---

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்

1995 ஆம் ஆண்டிற்கான

மகர யாழ் விருது பெறும்

மருத்துவருக்கு

## ★ வாழ்த்துக்கள் ★



வைத்திய கலாநிதி

**து. வி. ஜெயகுலராஜா**

அவர்கள்

மண்ணின் சேவையாளனுக்கு
மக்களின் தோழனுக்கு

எமது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்

உரிமையாளர்,

பொ. கெங்காதரம்பிள்ளை,

**கங்கா புகைப்பட நிலையம்**

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(35845)

---

அகில இலங்கை கம்பன் கழகத்தின்

1995 ஆம் ஆண்டிற்கான

## 'மகர யாழ்' விருது பெறும்

தன்னலமற்ற பெருஞ் சேவையாளன்

வைத்திய கலாநிதி

**து. வி. ஜெயகுலராஜா**

அவர்களை

எம் இதயம் கனிந்த மகிழ்வுடன்

O வாழ்த்துகின்றோம் O

உரிமையாளர், ஊழியர்கள்.

லைடன் புடவை நிலையம்,

249, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

[சி-633]

---

## பாடசாலைகளில்

மானிப்பாய், மார்ச் 23

சாந்தை சிற்றம்பல வித்தியா சாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு சி. குணரத்தினம் தலைமையில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

இணுவில் மத்திய கல்லூரி வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு கந்தசாமி கோயிலடியிலுள்ள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. மு. திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திரு. ஆ. மாணிக்கம் கலந்து கொள்வார். (இ-14)

★ ★ ★

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கற்பித்தல் உபகரணக் கண்காட்சி இன்றும் நாளையும் பாடசாலையில் அதிபர் திரு அ. அகிலதாஸ் தலைமையில் நடைபெறும். [ஒ-117]

★ ★ ★

கெற்பலியில் இயங்கும் புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலைய இல்ல மெய் வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.சண்முகவடிவு தலைமையில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்கலவன்பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர். திரு த. அப்புத்துரை தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (ஒ-31)

## வெளிநாட்டு தபால் கட்டணம் அதிகரிப்பில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வெளிநாட்டுத் தபால் கட்டணங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் முன்னைரைப் போன்றே கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் தபால் கட்டணங்களே உயர்த்தப்பட்டுள்ளதாகவும் இக் கட்டண உயர்வு தொடர்பான சுற்று நிருபமும் யாழ்ப்பாணத்திற்கு கடந்த திங்கட்கிழமையே கிடைக்கப் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது உள்ளூர் சாதாரண தபால் 2 ரூபாவாகவும் தபால் அட்டை ஒரு ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. [இ-4]

## கைத்தறி புடவைகள் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி நெசவுப் புடவைகள், யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சமாசத்தில் சந்தைப்படுத்தப்படும் இப் புடவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-17]

## தட்டுப்பாட்டுக்கு காரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

உதயன் 10 - 3 - 1995 இதழில் வெளியான ''தென்மராட்சியில் நேற்று பாணுக்குத் தட்டுப்பாடு'' என்ற செய்தி தொடர்பாக யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க மாவட்டத் தலைவர் பின்வருமாறு அறிவிக்கிறார்:-

மா தட்டுப்பாட்டிற்கும், யாழ் செயலகத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட லொறி பழுதடைந்து விட்டதனால் மா உரிய நேரத்தில் சென்றடையவில்லை. அதனாலேயே பாண் உற்பத்தி செய்ய முடியாமற் போய்விட்டது — என்பதாகும். (அ)

---

நடமாடும் துவிச்சக்கரவண்டி

மீன்வணிகர் மன்றம்

## பொதுக் கூட்டம்

நாளை [24-03-95] வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் அரசியல்துறை செயலகத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சிவை. கனகரத்தினம், தலைவர்

பொ. கிருபாமூர்த்தி, செயலாளர்

(35851)

---

யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகத் தமிழ் மன்றம்

நடத்தும்

மக்கள் எழுத்தாளர்

## அமரர் கே. டானியல்

# நினைவு தினம்

இடம்: கைலாசபதி கலையரங்கு

காலம்: இன்று [23-03-95] வியாழக்கிழமை மாலை 4 மணி

தலைமை: பா. மகாலிங்கசிவம் (தலைவர், தமிழ் மன்றம்)

நிகழ்ச்சி நிரல்

தமிழ் வாழ்த்து

அமைதி வணக்கம்

வரவேற்புரை: கு. மணிமேகலை (பத்திராதிபர், தமிழ் மன்றம்)

தலைமையுரை:

மன்றப் பெரும் பொருளாளர் உரை: திரு. சி. சிவலிங்கராஜா (பெரும் பொருளாளர், தமிழ் மன்றம்)

அறிமுகவுரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ் [தலைவர், தமிழ்த்துறை]

நினைவுரை: திரு. த. கலாமணி [விரிவுரையாளர், கல்வியியற்புலம்]

நினைவுரை: கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் (முதுநிலை விரிவுரையாளர் தரம் I தமிழ்த்துறை)

நன்றியுரை: ச. கிருபானந்தன் (செயலாளர், தமிழ் மன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழ் மன்றம்

யாழ். பல்கலைக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:

ஆறுமுகம் சிற்பாலயம்

திருநெல்வேலி

[சி-834]

---

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி நீங்காத நினைவில்

மார்ச் 23



**எழுத்தாளர் கே. டானியல்**

| | |
|---|---|
| மக்கள் சேவைக்காக இலங்கை மண்ணில் | மக்கள் சேவை ஆற்றியபின் இந்திய மண்ணில் |
| பிறப்பு: 25–3–1927 | இறப்பு: 23–3–1986 |

ஒரு பொதுவுடமை, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் ஒரேயொரு இலட்சியத்திற்காக தன் வாழ்நாள் முழுக்க மக்களுக்காகப் பேனா பிடித்து என்றும் மக்கள் அன்பையும், மதிப்பையும் பெற்றவர் நினைவாக —

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''வசந்தம்''
76/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(35847)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சினை தொடர வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் நடத்திவரும் பேச்சுக்கள் நம்பிக்கையுடன் தொடரப்பட வேண்டும்.

— ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இருதரப்பினரிடையேயும் நடக்கும் பேச்சுக்கள் நம்பிக்கையூட்டுவனவாக அமைய வேண்டும் என்றும் —

பேச்சுக்கள் தடைப்படாமல் தொடருவதற்கு இருதரப்பினரும் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய நாடாளுமன்றம் அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது [ஐ-3]

## எமது சொந்த நலன் கருதி நாம் அணிசேரவில்லை

### அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

கொழும்பு மார்ச் 23

நான் பிழைத்துக்கொள்வதற்காக எந்தப்பெரிய அரசியல் கட்சியிலும் தங்கியிருக்கவில்லை. எமது சொந்த நலன் கருதி எந்த அணியிலும் நாம் சேரவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் சுதந்திரமான ஒருகட்சியாகும்.

அமைச்சர் அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஐக்கியதேசியக்கட்சி ஈடுபட்டிருப்பதாக ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளதே என்றகேள்விக்கு பதிலளிக்கையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''பெரிய கட்சிகள் தான் எம்மில் தங்கியுள்ளன காரணம் பெரிய கட்சிகளின் நோக்கம் ஆட்சி அமைப்பதேயாகும். முஸ்லிம் காங்கிரஸின் நோக்கம் அரசாங்கத்தை அமைப்பது அல்ல''— என்றும் அவர் கூறினார்

(இ-எ)

## விண்ணப்பம் ஏற்பது இடைநிறுத்தம்

நவாலி, மார்ச் 23

யாழ். செயலக பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலக கருமபீடத்தில்—

1-8-1954ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுடைய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பங்களை ஏற்பது கடந்த 10ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது

இவர்களுக்கான இருபக்க படிவங்கள் முடிவடைந்தமையே இதற்கு காரணமாகும்.

எனினும் 54ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்தவர்களினதும் மற்றும் திருமணம், இறப்பு ஆகிய சான்றிதழ்களைப் பெறுபவர்களுக்கான விண்ணப்பங்களும் வழமைபோல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(ஐ-14 100)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பாதிக்கப்பட்டோர் விவரம் சேகரிப்பு

### இன்று முதல் பதிவு செய்து கொள்ளலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

1983ஆம் ஆண்டின் பின்னர் வன்செயல்கள் மற்றும் இயற்கைக் காரணிகளால் சொத்து இழப்பு, உயிரிழப்பு மற்றும் அங்கவீனம் போன்ற பாதிப்புக்கு உள்ளான மக்களின் விவரங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் இன்று முதல் பாதிப்பு விவரங்கள் பதியப்படவுள்ளன.

இன்று திங்கட்கிழமை சண்டிலிப்பாய் வடக்கு கிராமசேவகர் பிரிவுக்கு மேற்படி கிராமசேவகர் அலுவலகத்திலும் —

24ஆம் திகதி சண்டிலிப்பாய் மேற்கு, மாசியப்பிட்டி கிராம சேவகர் பிரிவுகளுக்கு சண்டிலிப்பாய் வடக்கு கிராம சேவகர் அலுவலகத்திலும் —

27 ஆம் திகதி மானிப்பாய் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு மேற்படி கிராம சேவகர் அலுவலகத்திலும் —

28ஆம் திகதி மானிப்பாய் வடக்கு கிராம சேவகர் பிரிவுக்கு மானிப்பாய் கிழக்கு கிராம சேவகர் அலுவலகத்திலும் —

29 ஆம் திகதி மானிப்பாய் தெற்கு கிராமசேவகர் பிரிவுக்கு ஜே/139 அலுவலகத்திலும் —

30 ஆம் திகதி நவாலி கிழக்கு, நவாலி தெற்கு கிராம சேவகர் பிரிவுகளுக்கு ஜே/135 அலுவலகத்திலும் —

31ஆம் திகதி நவாலி வடக்கு கிராம சேவகர் பிரிவுக்கு ஜே/134 அலுவலகத்திலும் —

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி உயரப்புலம், சாவற்காடு கிராமசேவகர் பிரிவுகளுக்கு ஜே/132 அலுவலகத்திலும் —

3ஆம் திகதி ஆனைக்கோட்டை கிராம சேவகர் பிரிவுக்கு ஜே/133 அலுவலகத்திலும் —

4ஆம திகதி சண்டிலிப்பாய் மத்தி, பிரான்பற்று கிராம சேவகர் பிரிவுகளுக்கு ஜே/142 அலுவலகத்திலும் -

6ஆம் திகதி மானிப்பாய் மேற்கு கிராம சேவகர் பிரிவுக்கு அக. பு. நிறு. கட்டிடை (ரி. ஆர். ஆர். ஒ.) விலும் — பதிவுகள் மேற்கொள்ளப்படும். [இ-14]

# சந்திரிகா - ஹமீது சந்திப்பு ரணிலின் ஆசியுடனேயே!

### பிந்தி வெளியாகியுள்ள தகவல்

கொழும்பு, மார்ச் 23

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் ஆசியுடன்தான் ஐ.தே.க. தவிசாளர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசினார் என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது.

ஹமீது—சந்திரிகா சந்திப்பு 90 நிமிடங்கள் நீடித்தது என்றும் — அங்கு இடம்பெற்ற பேச்சின் விவரங்களை ஹமீது பின்னர் ரணிலிடம் விவரித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் அதிகாரப்பரவலாக்கல் யோசனை ஆகியன பற்றியே அப்பேச்சில் ஆராயப்பட்டதாகவும் 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு என்ன செய்ய வேண்டும்; கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து ஹமீதுவும் சந்திரிகாவும் பேசினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா ஏற்பாடு செய்திருந்தார்.

(ஒ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**23 — 03 — 1995**

**வியாழன் இரவு**

- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவக்குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம்—''அயடீன் கலந்த மேசை உப்பு'' குறு நாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எங்களின் தேசம்

**24 — 03 — 1995**

**வெள்ளி காலை**

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15— மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**வியாழன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன்விளையும் பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30— நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## அகதிகளுடன் வந்த புடையன்!

தலைமன்னார், மார்ச்23

தமிழ் நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இலங்கை அகதிகளை ஏற்றி வந்த இராமானுஜம் என்ற கப்பலில் புடையன் பாம்பு ஒன்றும் வந்து சேர்ந்துள்ளது

தலைமன்னார் துறையில் அகதிகளின் பொதிகளை அடுக்கி வைப்பதில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தபோது ஒரு பொதிக்குள் இருந்து இந்த புடையன் பாம்பு வெளியேறியதாம்.

உடனடியாக அப்பாம்பு அடித்துக் கொல்லப்பட்டது. [இ-14)

## நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

கொழும்பு, மார்ச் 23

சண்டே ரைம்ஸ் ஆசிரியரை நீதிமன்றத்தில் இம்மாதம் 29ஆம் திகதி ஆஜராகும் படி கேட்டு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் சண்டே ரைம்ஸ் வார இதழில் 'கிசுகிசு'' பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா பற்றி எழுதப்பட்டிருந்தது தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இச்செய்தி தம்மை அவதூறு செய்வதாக அமைந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பொலீஸாருக்கு முறைப்பட்டிருந்தார்

(இ-எ)


## வாழ்த்துகிறோம்

சென் ஜோன்ஸ் அக்கடமியில் இயங்கும் யா-ஊர்காவற்றுறை கொத்தணி பாடசாலைகளின்

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரும்

''மகர யாழ்'' விருது பெறுகின்ற



வைத்திய கலாநிதி

துா. வி. ஜெயகுலராஜா

அவர்களை

வாழ்த்துவதுடன் அவரது பணி மேலும் தொடர இறையருளை வேண்டுகின்றோம்.

சென். ஜோன்ஸ் அக்கடமி,
சுண்டிக்குளி. ஊர்காவற்றுறை,
[35848] கொத்தணி பாடசாலைகள்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1995 ஏப்ரல் 21 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்:-

ரூபா 14,550 — 8x325 — 17,150 மாதமொன்றுக்கு

**தகைமைகள்**

1. அ) நிருவாகம் அல்லது முகாமை அல்லது வேறு பொருத்தமான துறையில் கலாநிதி பட்டத்துடன் அல்லது ஆராய்ச்சி முதுமாணிப்பட்டத்துடன் (12) பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவத்தைக் கொண்டுள்ள பட்டதாரி.

அல்லது

ஆ) தேர்வு மூலம் முதுமாணிப்பட்டம் அல்லது நிருவாகத்தில் அல்லது முகாமையில் டிப்ளோமாவுடன் (14) பதின்னான்கு ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவத்தைக் கொண்டுள்ள பட்டதாரி.

அல்லது

இ) 15 ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவத்துடனும் அதில் குறைந்த பட்சம் (8) எட்டு ஆண்டுகள் பல்கலைக்கழகத்திலும்/ அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ சிரேஷ்ட உதவிச் செயலாளர்/ அல்லது பிரதிப் பதிவாளர்/ பிரதிச் செயலாளர் பதவியை வகித்த பட்டதாரி.

அல்லது

ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் (15) பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத நிர்வாக அனுபவம் உடையவராய் அதில் குறைந்தபட்சம் (2) இரண்டு ஆண்டுகள் சிரேஷ்ட நிர்வாக பதவியொன்றை வகித்தவராயும் மாதமொன்றுக்கு 10,950/- க்குக் குறையாத திரட்டிய சம்பளத்தைப் பெறுபவரானபட்டதாரி.

குறிப்பு:-

1. நிர்வாக அனுபவம் என்பது இலங்கை நிர்வாக சேவையின் பதவியொன்றில் அல்லது அதையொத்த அல்லது அதைவிட உயர்ந்த பதவியொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்ற தன் பின்னர் பெற்ற அனுபவம் என்ற கருத்துடையதாகும்.
2. வயது:- 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கி, சிறப்பு அங்காடி கிளையிலோ சிறாப் ரின் முகப்பு மேசையிலோ செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளை ஒன்றை 23x10 சதமமீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு 2/ ரூபா முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றுடன் அனுப்புதல் வேண்டும்.

**விதிக்கப்பட்ட**

படிவங்களில் அனுப்பப்படும் விண்ணபங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளபபடும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நியமன அதிகாரிகள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவற்ற முறையில் விவரங்கள் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

—துணைவேந்தர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995 – 03 – 18

[சி-828]


# இனப்பிரச்சினைத் தீர்விலேயே சந்திரிகாவின் எதிர்கால அரசியல்!

> 'ராவய' பத்திரிகையில் வெளியான அரசியல் கட்டுரையின் தமிழாக்கம் இது

சந்திரிகா பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது பிரேமதாஸாவோ லலித் அத்துலத் முதலியோ காமினி திஸாநாயக்காவோ றோஹண விஜேவீரவோ உயிருடன் இருந்திருப்பின் சந்திரிகா எத்தனையோ சவால்களை எதிர்நோக்க வேண்டி இருந்திருக்கும்.

இந்த விதத்தில் பார்க்கும்போது சந்திரிகாவின் அரசியல் பெரமுனை கூட தன்னை சக்திமிக்க ஒரு இயக்கமாக காட்ட முயற்சிகளை மேற்கொண்டது. எனினும் றோஹண விஜவீர போன்ற சிறந்த ஒரு தலைவர் இல்லாமையினால் அக்கட்சி முன்பு போன்ற ஒரு பிரபல நிலையை அடைய முடியாமல் போய் விட்டது. கட்சியும் சிதைந்து விட்டது.

### சந்திரிகாவின் அரசியல் சதுரங்க விளையாட்டு

தன்னை எதிர்த்துச் சவால் விடக்கூடிய, தன்னிலும் சக்திமிக்க தலைவர் ஒருவர் இல்லாத சூழ்நிலையில் ஜனாதிபதி சநதிரிகாவால் தனது

பிரபாகரனுடனான பேச்சுவார்த்தைகளில் கூட ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு இல்லாத நல்வாய்ப்புக்கள் சந்திரிகாவிற்கு கிடைத்துள்ளன.

உலகெங்கும் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்கள் இப்பிரச்சினையிலுள்ள கடினத் தன்மையை ஓரளவு இலகுவாக்கியுள்ளன.

முன்னர் சில வல்லாதிக்கங்களுக்குப் பிரபாகரனைச் சக்திமிக்க ஒருவராக வைத்திருக்க வேண்டிய தேவை இருந்தது ஆனால் தற்போது அந்த நிலையில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்

## பிரேமா, லலித், காமினி, உயிருடன் இல்லாதது அரசியல் விளையாட்டை இலகுவாக்கியுள்ளது

வாழ்வு அதிர்ஷ்டத்துடன் கூடியதாக அமைந்துள்ளது எனக் கூறலாம்.

சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோது சக்திமிக்க அரசியல் தலைவர்கள்எவரும் உயிருடன் இருக்கவில்லை.

ஐ. தே. க. வின் தலைவர் தன்னை ஒரு சக்திமிக்க அரசியல் தலைவராகக் காட்ட முற்பட்டார் எனினும் தனக்கு முன்னர் கட்சியின் தலைவராக இருந்தவர்களிலும் பார்க்க அவர் பலவீனமானவர் என்பது வெளிப்படை அவரது பலவீனம் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்று கூறலாம்.

ஜே. வி. பி.என்று அழைக்கப்படும் ஜனதா விமுத்திப் அரசியல் சதுரங்க விளையாட்டுக்களை இலகுவில் ஆட முடியும் எனினும் வடக்குக் கிழக்கில் பிரபாகரன் தொடர்ந்தும் இருப்பது காரணமாக சந்திரிகாவின் அரசியல் சதுரங்க விளையாட்டு சிக்கல் நிலையை அடைந்துள்ளது.

பிரபாகரனுக்கு எதிராகமேற்கொள்ளும் விளையாட்டை சந்திரிகா உரிய முறையிலும் நுணுக்கமாகவும் ஆடாவிட்டால் பிரேமதாசா, காமினிதிசாநாயக்கா, அத்துலத்முதலி, றோஹண விஜேவீர ஆகியோர் உயிருடன் இல்லாதிருப்பினும் தோல்விக்கான வாய்ப்புகள் மிகவும் அதிகமாகும்.

ளது. எனினும் சிக்கல் நிலை குறிப்பிடத்தக்களவு குறைந்து காணப்படினும் அது முற்றிலும் அகன்றதாகக் கூற முடியாது. அரசியல் சதுரங்க விளையாட்டில் ஒரு காயைத் தானும் தவறாக நகர்த்தின் அது முழு அழிவுக்கும் காரணமாக அமையலாம்.

### மக்கள் விரக்தி

சந்திரிகா மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த தலைவியாக இருப்பினும், அம்மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வலுவான முறையில் பாதுகாக்க அவரால் இன்னும் முடியவில்லை.

இருப்பினும் அவர்மீது வைத்த நம்பிக்கையைக் கைவிட்டு மக்கள் ஐ.தே. கட்சிக்கோ அல்லது ஜே.வி. பிக்கோ ஆதரவை வழங்க முன்வராத போதிலும் அவர்கள் விரக்தியடைந்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா,ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜே. ஆர், பிரேமதாசா போன்ற தலைவர்களுக்கு மக்களின் ஆதரவு இருந்தது

சமூகத்தின் பல்வேறு வர்க்கத்தினரும் அவர்களை மதித்து வந்தனர்.

அவர்கள் அனைவரிலும் பார்க்க அதிகளவு ஆதரவுடன் ஆட்சிக்குவந்த சந்திரிகாவுக்கு வலுவான மக்கள் சக்தி பின்னணியில் இருப்பதாகத் தெரியவில்லை,

ஆட்சியில் இருப்பவருக்கு பின்னணியில் ஒரு வலுவான மக்கள் சக்தி இருக்கவேண்டியது இன்றியமையாததாகும் ஆட்சி செய்பவரைப் பாதுகாக்கமுன்வரும் சக்தி அதுவேயாகும்.

பண்டாரநாயக்காவுக்கு இவ்வாறான மக்கள் சக்தியும் விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் மற்றும் கல்வியறிவு [illegible] ஆதரவும் இருந்தது.

அதற்கு ஓரளவு ஒப்பான ஆதரவு ஜே. ஆர். ஜெயவர்தனாவுக்கும், பிரேமதாஸாவுக்கும் இருந்தது.

ஆனால் இவ்வாறான விசேஷ சக்திகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மாத்திரம் பின்னணியில் இருப்பதாகத் தெரியவில்லை

எல்லோரையும் திருப்திப்படுத்தும் கொள்கைகளைப் பின்பற்றுவதால் எல்லோரினதும் அதிருப்திக்கு ஆளாகும் நிலை தோன்றியுள்ளது.

தான் வழிகாட்டும் சமூகத்தில் தனக்கு சவாலாக அமையும் சக்திமிக்க ஓர் அரசியல் தலைமை இல்லாத போதும் மக்கள் சக்திகளின் பரஸ்பர எழுச்சி மூலம் அவ்வாறான ஒரு சவால் அவசியம் போல் தெரிகிறது.

வேறு எந்தப் பிரச்சினைக்கேனும் சாதகமான தீர்வினைக் காண முடியாவிடினும் இனப்பிரச்சினைக்கு மாத்திரம் சாதகமான தீர்வினைக் காண ஜனாதிபதியால் முடியுமாயின் அது மாத்திரமே அவரின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் வலுவுடன் அமையப் போதுமானதாகும்.

மக்கள் ஜனாதிபதியின் ஏனைய தோல்விகளை மறந்து இனப்பிரச்சினைக்குச் சாதகமான தீர்வினைக் கண்டதற்காக ஒன்றிணைந்து ஆர்ப்பரித்து அவரின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை வலுவாக்க அணிதிரள்வர்.

ஆனால் மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் எந்தத் தவறும் ஏற்படாமல் அதனை நுணுக்கமாகக் கையாளுவதிலேயே மாத்திரமே அவரது வெற்றி தங்கியுள்ளது.

[இ-10]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் புதிய லுமாலா, ஏசியா, ஈஸ்ட்ரேன் துவிச்சக்கர வண்டிகள் 24-3-95 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம். [சி-811]

தச்சு வேலை செய்யும் பல்கேரியன் மெஷின் விற்பனைக்கு உண்டு. 50 விதமான வேலைகள் [செய்யக்கூடியது. தொடர்பு கொள்ளவும்: வி. இரத்தினசிங்கம், இல. 19, எழிலூர், கொழும்புத்துறை. [35846]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

செல்லத்துரை தமிழ்ச் செல்வி (வசாவிளான்) ஆகியவருடைய அடையாள அட்டை [736313723 V] எமது கடையில் தவறவிடப் பட்டுள்ளது. தொடர்பு: ராசிபட்டுச் சோலை, 70, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம் [சி 629]

### கணக்காளர் தேவை

யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனத்திற்கு சிறிய கணக்குகள் பார்ப்பதற்கு பெண் கணக்காளர் தேவை. காலை 8-00 மணிக்கு முன் நேரில் வரவும். சாயி இல்லம், இல. 68A. ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் [35834]

### வீடு வளவு விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் வீடு, வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். திருமதி வனிதா தேவி விவேகானந்தன், செம்பாட்டு லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகில்) [358031]

### விலாஸ் அனாரவா

கார் பற்றறி மூலம் 12" கறுப்பு - வெள்ளை ரி. வியில் ரூபவாஹினி - மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்துதரப்படும். (கார் பற்றறி, 12" கறுப்பு - வெள்ளை ரி. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) விலாஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-397)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 23

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தால் மாதாந்தம் நடத்தப்படும் யோகாசனக் கருத்தரங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறும்.

கருத்தரங்கில் திரு யோகிர ஐந்திர கே. ரவீந்திரன் உடபடலர் கருத்துரை வழங்குவுள்ளனர். [ஐ 5]

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



வழிகாட்ட வந்தது: 28 — 07 — 1971

ஒளிநோக்கி சென்றது: 24 — 03 — 1993

### ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ்

(யாழ் / மருத்துவபீட மாணவன்)

மண்ணின் நோய் உன்னால்
மரணிக்கும் என்றிருந்தோம்
மருந்துக்கே மரணம் என்றால்
மாறுமா வருத்தம் இங்கு..

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை [24-3-95] வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ் அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில கலந்து செபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர், நண்பர்கள்.

58, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். [35832]

யாழ்.
றோட்டறிக் கழகத்தின்
54 ஆவது
ஆண்டு நிறைவை ஒட்டி
நடத்தப்படும்

# மாபெரும் அஞ்சலோட்ட நிகழ்வு
## RELAY CARNIVAL

எதிர்வரும் ஏப்ரல் 8, 9 ஆம் திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
பாடசாலை மாணவ / மாணவியருக்கு:
19 வயதின் கீழ்
17 வயதின் கீழ்
15 வயதின் கீழ்
மற்றும்
கழக வீரர்கள்,
வீராங்கனைகளுக்கு

மேலதிக விவரங்களைப் பெற:
செயலாளர்
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்,
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

தலைவர்.
யாழ். றோட்டறிக் கழகம்.

(சி-827)

## வங்கிக் கிளைகளுக்கு ஜெனரேற்றர் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கு ஜெனரேற்றர்கள் கிடைக்கவுள்ளன.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளரினால் இது தொடர்பாக கொழும்பு தலைமை காரியாலயத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாக அறியவந்தது.

இதற்கென வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் இருந்து 5-10 கே.வி.ஏ வலு கொண்ட ஜெனரேற்றர்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பில் கோரப்பட்டுள்ளன.

ஜெனரேற்றர்கள் கொள்வனவு செய்யப்பட்டதும் அவை இங்கு எடுத்துவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (ஐ-4)

வலிகாமம் மேற்கு
கலாசார பேரவையினரின்

# மாபெரும் இசைவிழா

மகாகணபதி பிள்ளையார்
கோயில் வீதி
சித்தன்கேணி.

**5 ஆம் நாள் (இறுதி நாள்)**
**23 - 03 - 1995**
**வியாழக்கிழமை**

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தின்
ஆதரவுடன்

மாலை

**5-30 — 6-30** மங்கல இசை
திரு. பி எஸ். பிச்சையப்பா — நாதஸ்வரம்
திரு. பி. ராஜி, திரு. பி. ரவி — தவில்
திரு. எஸ். முருகதாஸ்

**6-30 — 7-00** வயலின் இசை
திரு. ஏ. ஜெயராமன் — வயலின்
திரு. எஸ். துரைராசா — மிருதங்கம்
திரு. சதா. வேல்மாறன் — கடம்

**7-00 — 7-30**
(போராளிக் கலைஞர்கள் வழங்கும் நிகழ்ச்சி)
பாட்டு
செல்வன் அமரேசன் — பாட்டு
செல்வன் நிதர்சன் — மிருதங்கம்
செல்வன் வசந்தன் — கடம்
திரு. ஜெயராமன் — வயலின்

**7-30 — 8-30** மங்கல விளக்கேற்றல்
செல்வி கலைமணி
(பொறுப்பாளர், வி. பு. க. ப. க. மகளிர், யாழ் மாவட்டம்)
செல்வன் ஆ குமணன்
(பொறுப்பாளர், வி. பு க. ப. க. யாழ். மாவட்டம்)

★ வரவேற்புரை
திரு ஆ. கலையரசன்
(இணைப்பாளர், க. ப. க. சங்கானை வட்டம்)

★ தலைவர்
திரு ந. பகலவன்
(பொறுப்பாளர், திரைப்படப் பிரிவு)

★ முதன்மை விருந்தினர்
திரு. புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், வி. பு. க. ப. கழகம் தமிழீழம்)

★ சிறப்பு விருந்தினர்
செல்வி தணிகைச்செல்வி
(பொறுப்பாளர், அரசியல்துறை மகளிர் அமைப்பு, யாழ். மாவட்டம்)
திரு. செ இளையவன்
(பொறுப்பாளர், கடற்புலிகள் அரசியல்துறை, தமிழீழம்)

**8-30 — 10-00** பாட்டு
பாட்டு — இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கம்
மிருதங்கம் — சங்கீத ரத்தினம் எஸ். மகேந்திரம்
வயலின் — இசைஞான திலகம் ஆர். இராதாகிருஷ்ணன்
கடம் — திரு. சதா வேல்மாறன்

**10-00 — 11-00** வேணுகான இசை
V. K. பஞ்சமூர்த்தி — புல்லாங்குழல்
கலைமணி வே. கண்ணதாசன் — மிருதங்கம்
இசைஞான திலகம் ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. சதா வேல்மாறன் — கடம்

**11-00 — 11-45** நாட்டிய நாடகம்
தீவகக் கோட்ட க. ப. க. மகளிர் அமைப்புகளின் கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும்,

**"சோதியா அணையாத ஜோதி"**

**11-45 —** நாடகம்
வி. பு. க. ப. க. ஆதரவில்
புதுவை அணியின்

**சதியை வென்ற சாவுகள்**
**இசை நாடகம்**

● இசைப் பிரியர்களையும், அன்பர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**— கலாசாரப் பேரவையினர்.**
விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர்.

[சி-822]

## நினைவலைகள்



### மயில்வாகனம் பரமானந்தன்

Those we hold most dear never truly leave us...... They live on in the kindness they showed, the comfort they shared, and the love they brought into our lives.

யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் கடைசியாக புருணையில் ஆசிரியராகவும் கடமை ஆற்றிய அமரர் மயில்வாகனம் பரமானந்தன் அவர்கள் குறுகியகால சுகவீனத்தின் பின்னர் 21-12-94இல் அமெரிக்காவில் காலமானார். அன்னாரின் பூதவுடல் அமெரிக்காவில் உள்ள நியூயோர்சியில் மொனட்கிளாயர் என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது

அன்னார் கிருபாவின் அன்புக் கணவரும், சித்ரன் (U. S. A.), கீத்தா (U. S. A.), சுமி (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யுனேஷ் சின்னையா, நோர்மன் மாணிக்கவாசகன் ஆகியோரின் மாமனாரும், டெமெல்ஷாவின் பேரனாரும், அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி ஏ. ஜே மயில்வாகனத்தின் மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி வி. ரி. மோஸஸின் மருமகனும், ஜே. எம். ராஜரட்ணம் (U. S. A.), ராசமணி (Canada), டாக்டர் எம். சதானந்தன் (Canada), எம். கருணானந்தன் (Brunei), எம். ராஜேஸ்வரன் (U. K.) ஆகியோரின் சகோதரரும், ராஜேஸ் (U. S. A.), தேவராஜா (Canada), தேவி (Canada), ஜெயா (Bruen), தெல்மா (U. K.), காலஞ்சென்ற டாக்டர் எம். கருணைரட்ணம், திரு. எம். செல்வரட்ணம் (U. S. A.), டாக்டர் எம். நேசராஜா (U. S. A.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தகவல்:
**Kiruba Paramananthan.**

165, Cherokee Blvd. Unit 146,
Willowdale,
Ontario,
Canada M 2J 4 T 7. (சி-832)

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசரத்தினம் பிரிதிவிராஜ்

(கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

தோற்றம்: 07-06 1962

மறைவு: 01-04 1986 (லண்டன்)

திதி: 23—03—1995

காலங்கள் உருண்டும் கலையாத உன் பிரிவு
நேற்றுவரை நீ எம்முடனிருந்ததான நினைவு
நினைத்துப் பார்க்கின்றோம் நீயில்லாதது பெரிய இடைவெளி
முடியாவிட்டாலும் கூட, அது உன்னாலேயே நிரப்பப் படக் கூடியது

எம் குடும்பத்தின் குலவிளக்கே!
அந்நிய தேசத்தில் அவைவதற்கா
இங்கிருந்து அங்கு சென்றாய்
பௌர்ணமி நிலவு போல அன்பைப்
பாலாகச் சொரிந்தவனே.....
கவலைகளைத் தீர்த்து விட - உந்தன்
கனிவு முகம் பார்க்கவில்லை
உன் நினைவுகளை புதுப்பிக்க - அந்த
நிறைந்த உடல் காணவில்லை
காலமெல்லாம் எம்மைக் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
தண்ணீரில் கோலம் போலசடுதியாய் மறைந்தவனே!
வாவென்று கேட்கின்றோம் வந்துவிடமாட்டாயா?
ஆண்டுகள் ஓடிச்சென்று ஆனது ஒன்றுமில்லை
காலம் உந்தன் கவலைகளை ஆற்றாது
உந்தன் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல ஆண்டவனை வேண்டும்;

தந்தை, தாய், தங்கை
மைத்துனர், மருமகன்

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு (8395)

ஓம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் பங்குனித்திங்கள் 11ஆம் நாள் (25-03 95) சனிக்கிழமையும் உத்திராட நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினததில் மாலை 6-30 மணிமுதல் இரவு 8-15க்குள் வரும் துலாலக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புதல்வன் திருநிறை செல்வன் **மனோகர்** [பொறியியலாளர்] அவர்களுக்கும் | எமது புதல்வி திருநிறை செல்வி **விஜயலட்சுமி** அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று, திருமணம் பம்பலப்பிட்டி ஸ்ரீகதிர்வேலாயுத ஸ்வாமி கோவிலில (123, காலி வீதி) நடை பெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றம்சூழ வருகை தந்து திருமண விழாவினை சிறப்புற நடத்தி வைத்து மணமக்களை ஆசீர் வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. வெங்காதரம்பிள்ளை வேலுப்பிள்ளை,
திருமதி வேலுப்பிள்ளை பவழக்கொடி,
21 Terrance Avenue,
Mount-Lavinia

திரு சண்முகம் இராஜலிங்கம்
3/4, De Fonseka Place,
Colombo-4.

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை) (35668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## சந்திரிகாவின் இந்திய விஜயம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை இந்தியா பயணமாகிறார். எதிர்வரும் 28ஆம் திகதி வரை அங்கு தங்கிவிட்டு, பங்களாதேஷுக்கும் இரண்டுநாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

டென்மார்க், லண்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்று பத்துநாள்கள் கழித்து கடந்த ஞாயிற்றுக்கிழமைதான் அவர் நாடு திரும்பியிருந்தார். அந்தப் பிரயாணத்தின் களைதீர்வதற்கு முன்னர் நாளை இந்தியா புறப்படுகிறார்!

ஒரு நாட்டின் தலைவர் என்ற வகையில், புதிதாக தலைமைப்பதவிக்கு வந்தவர் என்ற வகையில், சந்திரிகா வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதைக் குறைகூற முடியாது தான். உலகத் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் நட்பையும், அபிமானத்தையும் பெறுவதற்கு, தன்னை பிரசித்தப்படுத்திக் கொள்ள, பிரபல்யமாக்கிக் கொள்ள அவருக்கு வெளிநாட்டுப் பயணங்கள் தேவைப்படலாம்!

ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் தடங்கலுற்று இருக்கும் வேளையில் —

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் புறந்தள்ளும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்வதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் காலக்கெடு விதித்திருக்கும் இந்தக் கட்டத்தில் —

அதற்கான பதில் எதனையும் அரசு தெரிவிக்காதிருப்பதால் சமாதானப் பேச்சுக்கள் முறிவடையுமோ என்னவோ என்ற 'சஸ்பென்ஸ்' நிலை உருவாகியிருக்கும் வேளையில் —

ஜனாதிபதி இந்தியாவுக்குச் செல்லவிருப்பது பலவிதமான சந்தேகங்களையும் கேள்விகளையும் இயல்பாகவே எழுப்புகின்றன!

சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னரும், இந்தியாவின் "ஆசீர்வாதத்தை"ப் பெறவேண்டும் என்பதில் சந்திரிகா அக்கறையாக இருந்தார். தனிப்பட்ட விஜயம் என்று சிங்கப்பூர் சென்றதே, உத்தியோகபூர்வமற்ற முறையில் இந்தியாவின் ஆலோசனை கேட்கவே என்று அரசியல் வட்டாரங்களில் அப்போது பேசப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான பின்னர் வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு நேரடியாக, உத்தியோகபூர்வமாக இனப்பிரச்சினை விடயம் குறித்துக் கருத்துப் பரிமாறப்பட்டது.

இப்போது சந்திரிகாவே இந்தியத் தலைவர்களுடன் நேருக்கு நேர் பேசி இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் "ஆசீர்வாதம்", வழிகாட்டல் என்பனவற்றை பெறப் போகிறார்!

பேச்சுவார்த்தை மேசையில் இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு அவசரப்படும் சந்திரிகா, அது குறித்து இந்தியாவின் ஆலோசனையையும் "அனுமதி"யையும் பெறுவதற்காகவே அங்கு செல்கிறார் என்ற எண்ணம் எவருக்கும் தோன்றும்!

தலைவர் பிரபாகரனின் கடிதத்திற்குப் பதில் அனுப்பாமலே ஜனாதிபதி இந்தியா பயணமாயின், காலக்கெடு முடியும் வரை அங்கேயே தங்கி நிற்பார். அதற்கு முன்னர் இரண்டு அமைச்சர்களை யாழ்ப்பாணம் அனுப்பி நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, இந்தியாவுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர் தீர்க்கமான முடிவு எடுக்கும் உத்தேசமும் ஜனாதிபதிக்கு இருக்குமோ? இது இப்போதுள்ள குழப்பத்தை விட மேலும் நிலைமையைச் சிக்கலாக்கக்கூடும்.

எப்படியோ, சந்திரிகாவின் இந்திய விஜயம் அரண்மனை எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னன் கதையாகவே இருக்கிறது!

# இந்திய தலைவர்களுடன் சந்திரிகா இனப்பிரச்சினை குறித்து பேசுவார்

### ஐலண்ட் பத்திரிகை தகவல்

கொழும்பு, மார்ச். 23

அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு நாளை இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வடக்கு - கிழக்கு பிரச்சினை குறித்து இந்திய தலைவர்களுடன் பேச்சு நடத்தவிருப்பதாக "த ஐலண்ட்" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வரை — ஐந்து நாட்களுக்கு இந்தியாவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் நரசிம்மராவ், ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா உட்பட பல உயர் அதிகாரிகளுடன் வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து பேச்சு நடத்துவார் என்றும் கட்டம் கட்டி வெளியிடப்பட்டுள்ள அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் விதித்துள்ள காலக்கெடு எதிர்வரும் 28ஆம் திகதியுடன் முடிவடைய விருப்பதையும் "த ஐலண்ட்" சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-3)

### ரணிலின் 'மச்சான்' டக்ளஸ்

கொழும்பு, மார்ச் 23

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை அடிக்கடி சந்தித்து பேச்சுக்கள் நடத்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரணில் தம்மை 'மச்சான்' என்றே அழைத்து வருவதாக டக்ளஸ் தேவானந்தா கூறிக்கொள்கிறார் என்று "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

### தொலைபேசி மூலமாக எய்ட்ஸ் தடுப்பு போதனை! தமிழ் நாட்டில் அமுலுக்கு வருகிறது

சென்னை, மார்ச் 23

எய்ட்ஸ் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகளை விரிவு படுத்தும் நோக்கில், தமிழ் நாட்டில், இதற்கென தனியான தொலை பேசிச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்த தொலை பேசிச் சேவை செயல்படத் தொடங்கும் என்று தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் நோய் ஒழிப்புத் திட்டத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த தொலை பேசிச் சேவையில் தொலைபேசி நவீன கணனி ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

மக்கள் எய்ட்ஸ் நோய் சம்பந்தமான கேள்விகளை தொலைபேசி மூலம் கேட்கலாம்.

மக்களின் சந்தேகங்களுக்கான பதில் அல்லது விளக்கம் உடனடியாக தரப்படும் அவை ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டவையாக இருக்கும்.

இதன் மூலம், எய்ட்ஸ் நோய் குறித்தும், நோய்க்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் தயக்கம் எதுவும் இன்றி மக்கள் தெரிந்து கொள்ள முடியும்.

இதன்படி ஒருவர் கேட்கும் கேள்விக்கான பதில்— கணனிப் பதிவில் இல்லாவிட்டால் அந்த நபருக்கு ஒரு சங்கேத அடையாளம் வழங்கப்படும்.

பின்னர் அவர் தனது கேள்விக்கான பதிலை அடுத்து வரும் ஓரிரு தினங்களில் தொடர்பு கொண்டுபெற்றுக்கொள்ளலாம்.

24 மணிநேரமும் இயங்க உள்ள இத்தொலைபேசிச் சேவையில் தொடர்பு கொள்ளும் நபர் தனது பெயர் விவரங்கள் எதனையும் வெளியிடத் தேவையில்லை.

இந்தியாவில் எச். ஐ. வி. கிருமிகளால் பாதிக்கப்பட்டோரில் மூன்றில் ஒரு பங்கினர் தமிழ் நாட்டிலேயே உள்ளனர்.

இதனால் தான் — ஆலோசனை வழங்கும் இப் புதிய முறையை முதலில் அமுல்படுத்த தமிழ் நாடு மாநிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது,

எய்ட்ஸ் நோயை குணமாக்கக் கூடிய மருந்து எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படாத நிலையில்—

இந் நோய்க்கு எதிரான பாதுகாப்பு முறைகளை மக்களிடையே பரப்புவதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியும் என இத் தொலை பேசிச் சேவையை ஏற்பாடு செய்தவர்கள் கருதுகின்றனர். (ஐ-5-4)

# புலிகள் வசமுள்ள ஐந்து மீனவர்கள்

### ஆணைக்குழுவிடம் பரஸ்தாபம்

திருகோணமலை, மார்ச் 23

விடுதலைப்புலிகள் வசம் உள்ள மீனவர்களைப்பார்வையிடுவதற்கு அவர்களின் மனைவிமார் காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் உதவியை நாடி உள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதிபதி கி. பாலகிட்ணர் தலைமையில் இந்த ஆணைக்குழு திருகோணமலை சமூகசேவைகள் நிலைய மண்டபத்தில் சமீபத்தில் கூடியது.

அப்போதே இந்த மீனவர்களின் மனைவிமார் ஆணைக்குழு முன் ஆஜராகி மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி இயந்திரப்படகு ஒன்றில்மீன்பிடிக்கச் சென்ற சமயம் காணாமற் போன பி. எச். பிறேமசிறி (வயது 28) எம். வீ. எம் ஜெயந்தி (வயது24) வீ. குருகுலசூரிய கே. பி. ஆனந்த ஆகியோர்சார்பாகவும்—

கடந்த வருடம் ஆகஸ்ட் 29 ஆம் திகதி மீன்பிடிக்கச்சென்ற சமயம் காணாமற்போன சாந்த டீசில்வா சார்பாகவுமே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களினால் எழுதப்பட்ட கடிதங்களும் ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்டன

தாம் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அதே சமயம் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மூலம் பிரஸ்தாப மீனவர்கள் தமது மனைவிமாருக்கு கடிதம் அனுப்பி இருந்தனர்.

இக்கடிதங்களைப் பார்வையிட்ட ஆணைக்குழு மேற்படி மீனவர்களின் மனைவிமார் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் வடபகுதி செல்ல நடவடிக்கை மேற்கொள்வதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

### அச்சுவேலி ஆஸ்பத்திரியில்

## கண் சத்திர சிகிச்சைக்கு நோயாளர் தெரிவு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 23

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் உள்ள மக்களுக்கு— கண்ணில் பூப்படலம் (கற்றறக்) அகற்றும் இலவச சத்திர சிகிச்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி அச்சுவேலியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் மேற் கொள்ளப்படவுள்ள இச்சத்திர சிகிச்சைக்கு நோயாளர்களைத் தெரிவு செய்யும் ஆரம்ப வைத்திய பரிசோதனைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் இடம்பெறும். (ஐ-14)

## நீரிழிவை குணப்படுத்தும் புதிய மருந்து கண்டுபிடிப்பு

புதுடில்லி, மார்ச் 23

நீரிழிவு நோயை பெருமளவு குணப்படுத்தக் கூடிய புதிய மருந்து ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தென்கொரியா ஆராய்ச்சி மையமும், மருந்துப் பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்தவர்களும் இணைந்து அதனைத் தயாரித்துள்ளனர்.

உலர்ந்த பட்டுப்புழுவைக் கொண்டே அந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிய மருந்து மாத்திரை வடிவில் அடுத்த வருடம் முதல் சந்தைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை இந்த மருந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [ஐ-5]

### காணாமற் போனோர் பற்றி

## வடக்கு கிழக்கில் இருந்து 12ஆயிரம் முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 23

1988ஆம் ஆண்டு முதல் காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு— வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து மட்டும் 12ஆயிரம் முறைப்பாடுகள் இதுவரை கிடைத்திருப்பதாக அரச சார்புப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-3)

### பெண்கள் மீதான சேஷ்டைகள்;

## காவல்துறை தொடர்ந்து கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வீதிகளில்செல்லும் இளம் பெண்கள் மீது பகிடியும், அங்க சேட்டையும் விடும் நபர்கள்மீது காவல்துறையினர் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இவ்வாறு சேட்டைவிட்டு நூற்றுக்குமேற்பட்டோர் கடந்தவாரம் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களில் 21பேர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; ஏனையோர் கடுமையாக எச்சரிக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர்.

இத்தகைய செயல்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதனால், சம்பந்தப்படுவோர் மீது மேலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும்—

பாரதூரமான சேட்டைகள் செய்வோர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்படுவர் எனவும்— காவல்துறை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-7)

### வவுனியாவில் குளபுனரமைப்புகென

## வெளிநாடுகள் வழங்கிய நிதி இராணுவத் தேவைகளுக்கு

கொழும்பு, மார்ச் 23

வவுனியாவில் உள்ள குளங்களை புனரமைப்பதற்கென வெளிநாடுகள் வழங்கிய நிதி இராணுவத் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாக கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதே சமயம் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில், விமான நிலைய விஸ்தரிப்புக்கென வவுனியாவில் உள்ள தமிழர்களின் நிலங்கள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன என்றும்—

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடுவழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டபோது இதுவரை எதுவித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை எனவும்— அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது (இ-5)

### மீட்கப்பட்ட சைக்கிள்கள் மீளளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சாவகச்சேரி காவல் பணிமனையால் மீட்கப்பட்ட சைக்கிள்களில் ஒரு தொகுதி சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் உரிமையாளர்கள் எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன்பாக, திங்கள், செவ்வாய், சனி தவிர்ந்தஅலுவலகநாட்களில் காலை 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மன்றின் நீதியாளர் அறிவித்துள்ளார். [இ-5]

### கட்டாக்காலி ஆடு, மாடுகள் தொல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஆனைக்கோட்டை, முள்ளி வயல் பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இவை இரவு பகலாக வயல் பகுதிகளில் மேய்ந்து பயிர்களை நாசம் செய்வதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குரக்கன், எள்ளு, சணல் போன்ற பயிர்கள் அப்பகுதி மக்களால் சிறுபோகப் பயிராகப் பயிரிடப்பட்டுள்ளன. (இ-5-15)

### ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சங்கானை— மாவடி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை முதல் 10 நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும்.

இந் நாட்களில் சிவசுரபி திரு. ஆறு. திருமுருகனின் பெரியபுராண தொடர் விரிவுரை இரவு 8 மணி முதல் 9 மணி வரை இடம்பெறும்.

### பிரதேச செயலகத்துக்கு ரூ. 10 லட்சம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். பிரதேசசெயலகப் பிரிவில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கென 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசிடமிருந்து இந்த நிதி தற்போது கிடைத்துள்ளதால், உடனடியாகவே வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். பிரதேச செயலகம் எடுத்துள்ளது. (ஐ-5-17)

### மீனவருக்கு கடனுதவி

தென்மராட்சி, மார்ச் 23

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியைச்சேர்ந்த 11 மீனவர்களுக்கு மீன்பிடி அபிவிருத்திக் கடனாக தலா 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சாவகச்சேரிப் பிரிவினர் இக்கடனை வழங்கியுள்ளனர்.

நாவற்குளி கோவிலாக்கண்டி பகுதி மீனவர்களுக்கும் இக்கடனுதவி விரைவில் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பிடிக்கப்பட்ட நாய்களை மீண்டும் பெறமுடியும்

### ஆனால் 100 ரூபா அபராதம்!

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினரால், வீதிகளில் வைத்துப் பிடிக்கப்படும் வளர்ப்பு நாய்களை நூறு ரூபா அபராதம் செலுத்தி மீளப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவற்றைத் தினமும் காலை 10-30 மணி தொடக்கம் 11-30 மணி வரை மீளப்பெறலாம்.

பிடிக்கப்பட்ட நாய்களுக்கு அனுமதிப்பத்திரம் மற்றும் விசர்நாய்த் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டமைக்கான சான்றிதழ் முதலியன பெறப்பட்டிருந்தால் மாத்திரமே நாய்கள் மீண்டும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும். (இ-5-17)

# பச்சைத் தேயிலை மாரடைப்பை தடுக்கும்

### ஜப்பானிய ஆய்வாளர் கண்டுபிடிப்பு

டோக்கியோ, மார்ச் 23

பதப்படுத்தப்படாத பச்சைத் தேயிலையில் இருந்து தயாரிக்கப்படும் தேநீரை அருந்துவதால் மாரடைப்பு, ஈரல் நோய்கள், கட்டிகள் என்பன ஏற்படுவது தடுக்கப்படும் என்று ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குருதியில் காணப்படும் கொலஸ்ரோல்— உயர்ந்த அடர்த்தி இலிப்போ புரதம், குறைந்த அடர்த்தி இலிப்போ புரதம் என இரு வகைப்படும்.

உயர்ந்த அடர்த்தி இலிப்போ புரதம் 'நல்ல கொலஸ்ரோல்' எனப்படுகின்றது.

பச்சைத் தேயிலையில் காணப்படும் பொலி பீனோல்கள், குருதியில் நல்ல கொலஸ்ரோலின் அடர்த்தியை அதிகரிக்கச் செய்து மாரடைப்பு ஏற்படும் சாத்தியத்தை குறைக்கின்றதாம்.

நாம் வழமையாக உபயோகிக்கும் கறுப்புத் தேயிலை நொதித்தல் முறை மூலம் தயாரிக்கப்படுவதால் பொலிபீனோலின் ஒருபகுதி அதிலிருந்து இழுக்கப்பட்டு விடுகின்றது.

இலங்கையில் பச்சைத் தேயிலை மிகச் சொற்ப அளவிலேயே தயாரிக்கப்படுகின்றது. சீனாவிலும் ஜப்பானிலும் பச்சைத் தேயிலையே பெருமளவில் தயாரிக்கப்படுகின்றது.

இதே வேளை ஜப்பானியர்கள் தேநீர் அருந்தும் போது குறைவாகவே சீனியையும் பாலையும் சேர்க்கிறார்கள் அதிக சீனியுள்ள தேநீர் மாரடைப்பு ஆபத்தை அதிகரிக்குமாம். (ஐ-14)

# சிறுதானியப் பயிர்கள் வரட்சியால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சங்கானை, வட்டுக்கோட்டை, சங்கரத்தை அராலி போன்ற பிரதேசங்களில் பயிரிடப்பட்டுள்ள சிறுதானியப்பயிர்கள் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் பயிரிடப்பட்டுள்ளபயறு, செளப்பி, உழுந்து, எள்ளு போன்ற சிறுதானியப் பயிர்களே இவ்வாறு வரட்சியால் கருகி அழியும் நிலையில் உள்ளன. (ஐ-5-17)

### கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஆனைக்கோட்டை நாலுகால் மடம் ஸ்ரீஞானவைரவர் சுவாமி கோயிலில் இம்மாதம் 7ஆம்திகதி தொடக்கம்16ஆம் திகதி,வரைகம்பராமாயண தொடர் சொற்பொழிவு நிகழ்த்தியதுக்காக 'வாகீசகலாநிதி' திரு க. நாகேஸ்வரன் 'செந்தமிழ்ச் சுடரோன்' எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (இ-5)

### அதிதி பேச்சாளர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். றோட்டறிக்கழகம் நடத்தும் "அதிதி பேச்சாளர் தினம்" இன்று மாலை 4.30 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுறை சிரேஷ்டவிரிவுரையாளர் திரு. எஸ். சத்தியசீலன் "செச்னிய பிரச்சினைகள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். (ஐ-5)

### இடம்பெயர்ந்த மாணவருக்கு உபகரணங்கள்

தென்மராட்சி, மார்ச் 23

தமிழர் புனர்வாழ்வுக்கழக சாவகச்சேரி பிரிவு, தென்மராட்சியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றது.

கடந்த வாரம் அல்லாரை ஆனந்த் குடியிருப்பு, சரசாலை சோபன் குடியிருப்பு, மட்டுவில் பொன்னம்மான் குடியிருப்பு, கச்சாய் இடம்பெயர்ந்தோர் முகாம் ஆகியவற்றில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-14-117)

# 1984ல் வழங்கிய வீடமைப்புகடனை திருப்பிச் செலுத்துமாறு பணிப்புரை

### திடீர் அறிவிப்பால் கடனாளிகள் குழப்பம்

வடமராட்சி, மார்ச் 23

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் 10 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1984ஆம் ஆண்டில் வீடு கட்டுவதற்கு வீடமைப்பு அதிகார சபையிடமிருந்து கடன் பெற்றவர்கள் தற்போது அதனை மீளச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[illegible] முன்னர் மாதாந்த தவணை அடிப்படையில் அதனை மீளச் செலுத்தி வந்தனர்.

தொடர்ந்து பிரேமதாஸா அரசு பதவிக்கு வந்ததும் இந்தக் கடனை உரியவர்கள் மீளச் செலுத்த வேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டது.

அதன்படி அந்தக் கடனை மீளப்பெறுவது நிறுத்தப்பட்டிருந்தது.


தொடர்ந்து டி. பி. விஜேதுங்கா தலைமையிலான அரசின் பதவிக் காலத்திலும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டுவந்தது.

ஆனால் தற்போது பொ. ஐ. மு. அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து மேற்படி கடனை திருப்பிச் செலுத்துமாறு கடனாளிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட காலத்தின் பின் திடீரென விடுக்கப்பட்ட இந்த பணிப்புரையால் கடனாளிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. [ஐ-5-173)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும், நன்றி நவிலலும்



## அமரர் நாகர் சின்னையா

(மலேசியா)

| அன்னை மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 11—05—1931 | 22—06—1995 |

**வீட்டுக்கிரியை: 24 — 03 — 1995**

''அன்பும் பண்பும் நிறைந்த என் கணவனே!
நாடுவிட்டு நாடு சென்ற நம்லதோர் தந்தையே!
நாட்கள் முப்பதொன்றென்ன பல கடந்தாலும்
உங்கள் அன்பு எமது நெஞ்சைவிட்டு-
அகலாது என்றும்.
பார்க்கும் இடங்களெல்லாம் உங்கள் முகம்!
கேட்கும் ஒலிகளெல்லாம் உங்கள் ஒலி! அப்பா
அவனியிலே எம்மை பாரட்டி சீராட்டி-
வளர்த்து ஆளாக்கி
அவனியிலே வாழவைத்த எங்கள் அன்பு அப்பாவே
நாம் வாழும் மட்டும் உங்களை என்றென்றும்-
மறவோம் அப்பா!''

பிரிந்த எமது அன்புத் தெய்வம் அப்பாவின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றென்றும் பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி,
உறவினர்கள், நண்பர்கள்.

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் நாகர் சின்னையா அவர்களின் திடீர் மறைவின் போது வருகை தந்து அனுதாபம் காட்டிய அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்;
செல்வன் சி. வசந்தசிலன் (மகன்).

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (35837)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சுப்பிரமணியம்

(ஓவசியர் மணியம்)

இருபாலை கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் ஆறுமுகம் சுப்பிரமணியம் 20-3-95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் இலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராசையா இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் [உதவி அதிபர், யா/ இருபாலை சீ சீ த க. பாட சாலை] அன்புக் கணவரும், சபேசன் (ஜேர்மனி) கணேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரவதனா (ஜேர்மனி), செல்வேந்திரகுமாரி [திருகோணமலை] ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கரன், யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-03-95 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
ச. பரமேஸ்வரி
(மனைவி)

கந்தகோட்டம்,
இருபாலை கிழக்கு. (35853)

## சோமசுந்தரம் கந்தசாமி

(தேனீர் கடை உரிமையாளர் கந்தர் மடம்)

சோமசுந்தரம் கந்தசாமி 20 - 3 - 95 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சோமசுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கணேசலிங்கம் (உரிமையாளர் லிங்க பவான் கொழும்பு), கணேசராசா (கொழும்பு), கணேஸ்வரன், சந்திரகலா, சந்திராதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவரஞ்சி, திருக்கேதீஸ்வரி, மகிந்தன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் அன்னபூரணம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரசாந், தர்சன், கிருசாந், கப்சவாகினி ஆகியோரின் பேரனாருமாவார்

அவரின் இறுதி கிரியை இன்று (23 - 3 - 95) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. கணேஸ்வரன்
(ஈசன் - மகன்)

83/6, பருத்தித்துறை வீதி.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (35855)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஆசிரியர் சம்பள விவரம்

### தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்கள் (UN CERTIFICATED TEACHERS)

| தற்போது பெறும் வருடாந்த சம்பளம் ரூபா | சேவைக்காலம் | பெறப்போகும் புதிய சம்பளம் ரூபா |
|---|---|---|
| 24,120 | வருடம் 1 | 32,520 |
| 24,780 | வருடம் 2 | 33.300 |
| 25,440 | வருடம் 3 | 34.080 |
| 26.100 | வருடம் 4 | 34.860 |
| 26.760 | வருடம் 5 | 35,640 |
| 27,420 | வருடம் 6 | 36,420 |
| 28.080 | வருடம் 7 | 37,200 |
| 28.740 | வருடம் 8 | 37,980 |
| 29,400 | வருடம் 9 | 38,760 |
| 30,060 | வருடம் 10 | 39,540 |
| 30.720 | வருடம் 11 | 42,720 |
| 31.380 | வருடம் 12 | 43,920 |
| 32,040 | வருடம் 13 | 45,120 |
| 32.700 | வருடம் 14 | 46,320 |
| 33,360 | வருடம் 15 | 47 520 |
| 34,140 | வருடம் 16 | 48,720 |
| 34.920 | வருடம் 17 | 49.920 |
| 35.700 | வருடம் 18 | 51,120 |
| 36.480 | வருடம் 19 | 52,320 |
| 37,260 | வருடம் 20 | 53.520 |
| 38,040 | வருடம் 21 | 54,720 |
| — | — | 55.920 |
| — | — | 57,120 |

### தராதர பத்திரம் உள்ள ஆசிரியர்கள் (CERTIFICATED TEACHERS)

| | | |
|---|---|---|
| 27.420 | வருடம் 1 | 36,420 |
| 28.080 | வருடம் 2 | 37,200 |
| 28,740 | வருடம் 3 | 37,980 |
| 29 400 | வருடம் 4 | 38.760 |
| 30 060 | வருடம் 5 | 39.540 |
| 31.380 | வருடம் 6 | 42,720 |
| 32.040 | வருடம் 7 | 43.920 |
| 32,700 | வருடம் 8 | 45.120 |
| 33.360 | வருடம் 9 | 46,320 |
| 34.140 | வருடம் 10 | 47.520 |
| 34.920 | வருடம் 11 | 48,720 |
| 35 700 | வருடம் 12 | 49,920 |
| 36 480 | வருடம் 13 | 51,120 |
| 37.260 | வருடம் 14 | 52,320 |
| 38 040 | வருடம் 15 | 53,520 |
| 38 820 | வருடம் 16 | 54,720 |
| 39,600 | வருடம் 17 | 55,920 |
| — | — | 57,120 |

### பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (TRAINED TEACHERS)

| | | |
|---|---|---|
| 32 520 | வருடம் 1 | 45.120 |
| 33 300 | வருடம் 2 | 46 320 |
| 34 080 | வருடம் 3 | 47.520 |
| 34 860 | வருடம் 4 | 48 720 |
| 35 640 | வருடம் 5 | 49.920 |
| 36.420 | வருடம் 6 | 51.120 |
| 37 200 | வருடம் 7 | 52 320 |
| 37 980 | வருடம் 8 | 53 520 |
| 39.540 | வருடம் 9 | 54 720 |
| 40 320 | வருடம் 10 | 55 920 |
| 41 520 | வருடம் 11 | 57 000 |
| 42 720 | வருடம் 12 | 58.560 |
| 43 920 | வருடம் 13 | 60 120 |
| 45.120 | வருடம் 14 | 61.680 |
| 46 320 | வருடம் 15 | 63 240 |
| 47 520 | வருடம் 16 | 64 800 |
| — | — | 66.360 |
| — | — | 67 920 |
| — | — | 69 480 |
| — | — | 71 040 |
| — | — | 80.400 |
| — | — | 83 400 |
| — | — | 86.400 |
| — | — | 89.400 |
| — | — | 92 400 |
| — | — | 95.400 |
| — | — | 98 400 |
| — | — | 1,01,400 |

### பட்டபின் கல்வி டிப்புளோமா பெறாத பொதுப் பட்டதாரி ஆசிரியரின் சம்பள திட்டம் (GENERAL GRADUATE TEACHERS WITHOUT POST GRADUATE DIP. IN - EDUCATION)

| | | |
|---|---|---|
| 37 200 | வருடம் 1 | 48 720 |
| 37 980 | வருடம் 2 | 49 920 |
| 38 760 | வருடம் 3 | 51 120 |
| 39,540 | வருடம் 4 | 52 320 |
| 40 320 | வருடம் 5 | 53 520 |
| 41 520 | வருடம் 6 | 54 720 |
| 42 720 | வருடம் 7 | 55.920 |
| 43 920 | வருடம் 8 | 57 120 |
| 45 120 | வருடம் 9 | 57 120 |
| 46 320 | வருடம் 10 | 57 120 |
| 47.520 | வருடம் 11 | 58 560 |
| 48 720 | வருடம் 12 | 60 120 |
| 49 920 | வருடம் 13 | 61.680 |
| 51.120 | வருடம் 14 | 63.240 |
| 52 320 | வருடம் 15 | 64 800 |
| 53.880 | வருடம் 16 | 66 360 |
| — | வருடம் 17 | 67.920 |
| — | வருடம் 18 | 69 480 |
| — | வருடம் 19 | 71.040 |
| — | வருடம் 20 | 72 600 |
| — | வருடம் 21 | 80.400 |
| — | வருடம் 22 | 83.400 |
| — | வருடம் 23 | 86.400 |
| — | வருடம் 24 | 89 400 |
| — | வருடம் 25 | 92 400 |
| — | வருடம் 26 | 95 400 |
| — | வருடம் 27 | 98 400 |
| — | வருடம் 28 | 1.01.400 |

### பிரபா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வளர்த்து வலுப்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்

திரு. பிரபாகரனை நாடு கடத்தும் விவரம் பற்றிய எந்தவொரு பிரச்சினையும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது எழுவதற்கு இடமில்லை

இந்த விடயத்தில் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மார்ச் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மிகத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

இலங்கை அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளை இந்திய அரசு வரவேற்றுள்ளது என்பதே உண்மையான நிலையாகும் ... எனவும் தெரிவிக்கப்பட்டும் ... (உ-4)

### விளையாட்டு நிகழ்வுகள்

அமரர் ஈ.கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ் உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் —9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான —விலகல்முறை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி;- றோயல் அணி எதிர் பல்கலைக்கழக அணி

★ 4.30 மணி;- யாழ் பாரதி அணி எதிர் கலைவாணி அணி. (உ)

### தூதுக்குழுவை—

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரும்பிய சந்திரிகா ஆயரை அழைத்து புலிகளின் தலைவரின் பிந்திய கடிதம் மற்றும் யாழ்ப்பாணத்து நிலைமைகள் குறித்து விரிவாகப் பேசினார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இந்தப் பேச்சுக்களை அடுத்தே ஆயர் அடங்கிய தூதுக்குழு ஒன்றை யாழ்ப்பாணம் அனுப்பும் திட்டம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ஆனால் —

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து திட்டவட்டமான முடிவை எதிர்பார்த்து, மார்ச் 28 ஆம் திகதியைக்குறிப்பிட்டு காலக்கெடு விதித்திருக்கும் புலிகள், அதற்கிடையில் இவ்விடயம் குறித்து பேச்சு நடத்தி இழுபறிப்படவோ அல்லது விதிக்கப்பட்ட காலக் கெடுவை பேச்சுக்களைக் காட்டி நீடிக்கச் செய்யவோ அனுமதிப்பார்களா என்பது சந்தேகமே என தகவல் அறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து திட்டவட்டமான பதில் எதையும் அரசு வெளிப்படுத்தாத நிலையில்— அப்பிரச்சினை குறித்து மேலும் பேச்சு நடத்துவதற்கு ஒருகுழு வருவதை புலிகள் விரும்பமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### 50 வருடங்களாக—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அனுமதிக்கப்பட வேண்டும்.

கிழக்கில் பிரகடனப்படுத்தப்படாத பொருளாதாரத் தடை இருக்கிறது. அது நீக்கப்பட வேண்டும்.

யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுக்கள் செயற்படவில்லை.

இவை பற்றி அரசுடன் திரும்பத் திரும்பப் பேசினோம். பயனில்லை. பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் திருப்திகரமாக செயற்படுத்தப்படவில்லை.

நாம் வடக்கு - கிழக்கை மையமாக வைத்துப் பேசினோம். ஆனால் அரசு யாழ்ப்பாணத்தையே மையமாக வைத்துப் பேசியது.

யாழ்ப்பாணத்திற்கான 4 ஆயிரம் கோடி ரூபா புனரமைப்புத் திட்டம் பின் குடாநாட்டிற்கான ஐநூறு கோடி ரூபாவாகி பின்பு யாழ் மாநகரசபைக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

மோதல் தவிர்ப்பு ஏற்பட்ட பின்னர் — நாம் ஏதும் செய்ய மாட்டோம் என்ற நம்பிக்கையில் — திட்டமிட்ட குடியேற்றங்கள் பெருமளவில் இடம் பெற்றுவருகின்றன

தமிழ் — முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விரிசல் குறைந்துள்ள இந்த வேளையில் முஸ்லிம் மக்களைத் திட்டமிட்டு தமிழரின் இடங்களில் குடியேற்றும் நடவடிக்கை தீவிரமாக இடம் பெற்று வருகின்றது.

+ இதனால் மீண்டும் தமிழ்— முஸ்லிம் பிளவு ஏற்பட்டால் அதற்கு நாம் தான் காரணம் என்று காரணம் கற்பிக்கவும் அரச தரப்பினர் முயல்வர்.

— என்றார். (உ-4)

### புலிகளின்—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வருவதாக கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று நேற்று தெரிவித்தது.

இது தொடர்பான அரசாங்கத்தின் அறிவிப்பு பெரும்பாலும் நேற்று வெளிவரும் என எதிர்பார்க்கப் பட்டதாகவும்—

விடுதலைப் புலிகளுடனான முட்டுக்கட்டை நிலையைத் தளர்த்துவதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்திருப்பதாக கூறப்படுவதாகவும்—

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ- 4)

# பேச்சை தொடர உதவுமாறு புலிகளிடம் கோரிக்கை

## அமெரிக்கா விடுத்துள்ளது

கொழும்பு. மார்ச். 23

சமாதானப் பேச்சுக்களை தொடர ஒத்துழைப்பு வழங்குமாறு அமெரிக்கா விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது

அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'டெய்லிநியூஸ்' பத்திரிகையில் நேற்று இந்தச் செய்தி வெளியாகி இருந்தது.

தற்போது நடைபெற்று வரும் பேச்சுக்களை எந்த வித தடையும் இன்றித் தொடர உதவ வேண்டும் என்றும் அமெரிக்கா மேலும் கேட்டுள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி
வருடாந்த
இல்ல விளையாட்டுப் போட்டி
1995
காலம்: 24 - 03 - 1995 (வெள்ளிக்கிழமை)
பி.பகல் 1-30 மணி
பாடசாலை அணிகளுக்கும்
கழக அணிகளுக்குமான, அஞ்சலோட்டம்.
பங்கு பற்றும் அணிகள்
24 - 03 - 1995 பி. பகல் 2-00 மணிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.
— அதிபர்
[சி-833]

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்துரை சிவசுப்பிரமணியம்

(பாலா)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 19 — 07 — 1939 | 21 — 02 — 1995 |

''அன்புக் குரியோய் அறிவுடைய எம் தலைவா!
துன்பமே நின்பிரிவு துணையின்றி வருந்துகின்றோம்
கண்கள் கலங்கிடநாம் கதறுகின்றோம் கதியின்றி
எண்ண எண்ண எம்நெஞ்சு ஏங்கித் துடிக்கிறதே,
ஐயா எமைப்பிரிந்து மதியொன்று ஆகிறது,
நையாமல் நாம் இருக்க நல்ல தொன்று செசல்லீரோ!
நல்லசிவ னார்பாதம் நண்ணினீர் நொடிப்பொழுதில்
எல்லோரும் நும்மான்ம சாந்திக்கு இறைஞ்சு-
கின்றோம்.

எங்கள் குடும்பத்தலைவரின் ஆன்ம சாந்திக் கிரியைகள் இன்று [23 - 03 - 95] வியாழக்கிழமை முற்பகல் 9 மணியில் இருந்து ஆரம்பமாகி நடைபெறவுள்ளன குறித்த ஆன்மசாந்திக் கிரியைகளில் பங்கு பற்றி அன்னாரின் ஆன்மசாந்தியின் பொருட்டுப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்.

சிவகுல வீதி,
உரும்பிராய்.
23 - 03 - 1995. [35849]

# மரண அறிவித்தல்

## திருமதி சிவசம்பு பாறுப்பிள்ளை

(பூஅம்மா)

வட்டு. மேற்கைச் சேர்ந்த சிவசம்பு பாறுப்பிள்ளை நேற்று சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவசம்பு (மலேயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-3-95) முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கியாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. (35854)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org